கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

**முன்னிலை திருமதி. S.ஆனந்தவல்லி,B.A.,B.L.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ),

அருப்புக்கோட்டை.

2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**வழக்கிடை மனு எண்.13/2026**

**உள்**

**அசல் வழக்கு எண்.58/2016**

**---**

விவேகானந்தன் ---- மனுதாரர்/வாதி

**--எதிர்--**

1. கோபாலகிருஷ்ணன்(இறந்துவிட்டார்)
2. சுப்புராஜ் (இறந்துவிட்டார்)
3. விஜயலட்சுமி
4. நாகஜோதி
5. மகேஸ்வரி
6. ராஜேஸ்கண்ணன்
7. ஜெயமோகனா,
8. சுப்புத்தாய்
9. கண்ணன் --எதிர்மனுதார்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 17.06.2026ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 10.07.2026ம் தேதியன்று இந்த நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், 3 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.ராஜா தேசிங் அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 6, 8 மற்றும் 9ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்காக இருந்து வந்த இம்மனுவினை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S

**<u>உத்தரவு</u>**

மனுவில் கண்ட விவரப்படி, மனுவில் குறிப்பிட்டுள்ள நபரை விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி, மனுதாரர்/வாதியால் இம்மனுவானது உ.வி.மு.ச. கட்டளை 16 விதி 1(2) மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்</u>**: –

அசல் வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்து மனுதாரருக்கு பூர்வீக பாத்தியமானது என்றும், அவர் தகப்பனார் இறந்தபின்பு குடும்பத்தில் நடந்த வாய்மொழி பாகத்தில் தாவா சொத்து அவர் பாகத்திற்கு கிடைத்து அடைந்து அனுபவித்து வருவதாகவும், வாய்மொழி பாகம் சம்மந்தமாக அவருடைய சகோதரிகளில் ஒருவரான நாகஜோதி என்பவரை விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல்.

3. **<u>3 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள்/3 மற்றும் 7ம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்: –</u>**.

(1) மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவராவார். மனுதாரர் அபிடவிட்டில் 4ம்பிரதிவாதியை சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்று யாதொரு விபரமும் கூறவில்லை என்றும், உண்மையை மறைத்து கறை படிந்த கரத்துடன் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதியை வாதி தரப்பு சாட்சியாக விசாரிக்க சட்டத்தில் இடமில்லை என்றும், ஆர்டர் 16 ரூல் 1–ன்படி நீதிமன்றம் எழுவினாக்கள் தீர்மானித்த பின்பு ஒரு வழக்கில் விசாரிக்க வேண்டிய சாட்சிகள் பட்டியலை இரு தரப்பினரும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், ஆர்டர் 16 ரூல் 2ன்படி அவ்வாறு பட்டியலில் கண்ட சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என்று தரப்பினர்கள் விரும்பினால் அவர்களுக்கு நீதிமன்ற சம்மன் அனுப்ப வகை செய்யப்பட்டுள்ளதாகவும், ஆர்டர் 16 ரூல் 1ஏ–ன் படி எந்தவித சம்மனும் அனுப்பாமல் தரப்பினர் அவர்களுடைய சாட்சியத்தை விசாரித்துக் கொள்ளலாம் என்று சட்டம் அனுமதி அளித்து இருப்பதாகவும், இந்த வழக்கில் கண்ட 4ம்பிரதிவாதி வாதிக்கு அனுசரணையாக வழக்கினை எக்ஸ்பார்ட்டிக்கு விட்டுள்ளதாகவும், அவர் எந்தவித எதிர்வழக்குரையும் தாக்கம் செய்யவில்லை என்றும்,

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

அவருடைய கட்சியை நீதிமன்றத்தில் தெளிவுப்படுத்த எதிர்வழக்குரை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க சட்டத்தில் வகை இருப்பதாகவும், அதனை தவிர்த்து குறுக்கு வழியில் அவருக்கு சாட்சி சம்மன் அனுப்ப விசாரிக்க சட்டத்தில் வகையில்லை என்றும், மனுதாரர் மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டி எதிருரை தாக்கல்.

4. <u>பிரச்சினை : –</u>

**இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா ? என்பதே ஆகும்.**

<u>**தீர்வு–**</u>

**(1).** இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர்/வாதியின் மனு, பிராது மற்றும் 3 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் எதிருரை, எதிர்வழக்குரை பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை. இருதரப்பிலும் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**(2).** வழக்குக் கோப்பை பரிசீலிக்கையில், மனுதாரர்/வாதி அசல் வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் வாதி தரப்பு கூடுதல் சாட்சிக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது.

(3) மனுதாரர்/வாதி தரப்பில், இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியை சாட்சியாக விசாரிக்க அனுமதி கேட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(4) 3 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், ஒரு வழக்கில் விசாரிக்க வேண்டிய சாட்சிகள் பட்டியலை இரு தரப்பினரும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், சாட்சி பட்டியல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்பு சாட்சி பட்டியலில் உள்ள சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என்றும், தரப்பினர்கள் விரும்பினால் நீதிமன்ற சம்மன் அனுப்ப வகை உள்ளது என்றும், 4ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அவருக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க சட்டத்தில் வழி இருக்கின்றது என்றும், அதனை தவிர்த்து குறுக்கு வழியில் சாட்சி சம்மன் அனுப்ப எந்த வழியும்

ANANTHAVALLI S
Digitally signed by ANANTHAVALLI S

இல்லை என்றும், இம்மனுவை தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(5) வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில், வாதி தரப்பு கூடுதல் சாட்சிக்காக வழக்கு நிலுவையில் உள்ளது. இவ்வழக்கில் 4ம் பிரதிவாதிக்கு எதிராக ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி கட்டளை 16 விதி 1(2)ன் படி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். கட்டளை 16 விதி 1ன் படி, "**தரப்பினர்கள் சாட்சியம் கொடுக்க அல்லது ஆவணங்களை ஒப்படைக்க அவர்கள் வரவழைக்க உத்தேசித்திருக்கிற சாட்சிகளின் பட்டியல் ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தல் வேண்டும். அத்தகைய சாட்சிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாவதற்கான அழைப்பாணைகளை வழக்கு தரப்பினர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கட்டளை 16 விதி 1(2)ன் படி, "**நபர் ஒருவர் முன்னிலையாவதற்காக அழைப்பாணையைப் பெற்றுக்கொள்ள எதையும் பெற விரும்பும் ஒரு தரப்பினர் எந்த நோக்கத்திற்காக அந்தச் சாட்சிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தேசிக்கப்படுகிறது என்று உரைத்து ஒரு விண்ணப்பத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தல் வேண்டும்"** என்று உள்ளது. மேற்படி கட்டளையின் படி, வாதி தரப்பில் 4ம் பிரதிவாதியை விசாரிப்பதற்கு காரணமாக வாய்மொழி பாகம் சம்பந்தமாக அவரது சகோதரி நாகஜோதியை விசாரிக்க அனுமதி கேட்கப்பட்டுள்ளது.

(6) வாதியின் உடன்பிறந்த சகோதரி 4ம் பிரதிவாதி நாகஜோதி ஆவார். தாவா சொத்து மீது வாதி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு, அசல் வழக்கு தாக்கல் செய்து, அதில் தாவா சொத்து அவருக்கு பூர்விக பாத்தியமானது என்றும், அவரது தகப்பனார் இறந்தபின்பு அவருக்கு குடும்பத்தில் நடந்த வாய்மொழி பாகத்தில் கிடைத்து அவர் அடைந்து அனுபவித்து வருகிறார் என்றும், அது சம்பந்தமாக விசாரிப்பதற்கு அவரது உடன்பிறந்த சகோதரியான 4ம் பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்ப அனுமதி கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. கட்டளை 16 விதி 2 ன்படி, மனு முறையாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பு காரணங்கள் ஏற்கக்கூடியதாக உள்ளது. ஆகவே, தரப்பினர்கள் அவர்களது வழக்கை நிரூபிப்பதற்குப் போதுமான சாட்சிகளை முன்னிறுத்துவதற்கு, கீழமை நீதிமன்றங்கள் தரப்பினர்களுக்கு போதுமான வாய்ப்புகளை வழங்க வேண்டும் என்பதை

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. ஆகவே, 4ம் பிரதிவாதியை சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரிய இம்மனுவை அனுமதிப்பது நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

மேற்படி, உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 14ம் நாள் பகரப்பட்டது.

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை(மு.கூ.பொ).

**<u>மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :–** இல்லை

**<u>3 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள்/3 மற்றும் 7ம் பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> –** இல்லை

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை(மு.கூ.பொ).

-----------------------------------

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை.
இடைநிலைமனு எண்.13/2026
உள்
அ.வ.எண்.58/2016
சீரான/வரைவு உத்தரவு
நாள் –14.07.2026

-----------------------------------